# அமெரிக்கா அழைக்கிறது!

ஆ. கந்தையா, எம். ஏ., பி. டி.



# அமெரிக்கா அழைக்கிறது!

ஆர். காந்திமதி, எம். ஏ., பி. டி.

1

"ஆண்டவன் இன்னொரு இரு நூறு வயதையும், இளமையையும் கொடுத்தாரானால், நூறு வருஷம் நம் நாட்டுக் குழந்தைகளுக்கு மற்ற நாட்டைப் பற்றி எடுத்துச் சொல்லலாம்; இன்னொரு நூறு வருஷங்களுக்கு மற்ற நாடுகளில் சுற்றி நம் நாட்டு மதம், நாகரிகம், கலாசாரம், மொழி, பழக்க வழக்கங்கள் முதலியவற்றைப் பற்றியும் எடுத்துரைத்து, பரஸ்பரம் உள்ள தப்பபிப்பிராயங்களை அகற்ற முயலலாம்" — இப்படி ஒரு எண்ணம் என் பிஞ்சு உள்ளத்திலே அடிக்கொரு தரம் தலைகாட்டிக் கொண்டே இருந்தது.

இது சாத்தியமல்ல என்று என் நெஞ்சு எதிர்த்துக் கூறும். ஆயினும் ஆசிரியை என்ற முறையில் மற்ற மேனாடுகளுக்குச் சென்று, முக்கியமாக "புது உலகிற்கு"ச் சென்று, அங்குள்ள மக்களைக் கண்டு, நம்மைப் பற்றி எடுத்து உணர்த்த வேண்டும்; அங்குள்ள மாணவர்களுக்கு நம் சரித்திரத்தைப் போதிக்க வேண்டும். அவர்கள் நம்மைப் பற்றிக் கொண்டுள்ள தப்பபிப்பிராயத்தை ஓரளவாவது அகற்ற வேண்டும் என்று விரும்பினேன். இரண்டாம் முறை மேனாடுகளுக்குச் செல்ல வாய்ப்புக் கிட்டும்போது, ஆசிரியை என்ற முறையிலேயே போக ஆவல் கொண்டேன்.

அகில உலக மக்களிடையே அன்பையும் சமாதானத்தையும் பரவச் செய்வதில் அரசியல் நிபுணர்



